

தருமபுரி மேற்கு மாவட்டம், தர்மபுரி ஒன்றியம், வெள்ளாளப்பட்டி ஊராட்சி, நத்தத்தில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதய நிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கபடி போட்டியினை மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் தலைமை ஏற்று துவக்கி வைத்தார். உடன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.சிவகுரு, ஒன்றியச் செயலாளர்கள் என்.ஏ.மாது, டாக்டர் எம்.பிரபுராஜசேகர், சி.முத்துக்குமார், ஆர்.கண்ணப்பெருமாள், ஜி.வி.கே.சரவணன் பொதுக்குழு உறுப்பினர்கள் லட்சுமணன், மோகன், மற்றும் மாவட்ட, ஒன்றியக் கழக நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள், விளையாட்டு அணி நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.




திருப்பூர் மாவட்டம், திப்பம்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியில் ' நலம் காக்கும் ஸ்டாலின் பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவ முகாம் கழக துணைப் பொது செயலாளர், அமைச்சர் மு. பெ சுவாமிநாதன், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ. பிரகாஷ் ஆகியோர் நேற்று முன்தினம் (27.12.2025) துவங்கி வைத்தனர். உடன் திருப்பூர் மாநகராட்சி 4–ம் மண்டலக் குழுத் தலைவர் இல. பத்மநாபன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அதிகாரிகள், பொதுமக்கள் மற்றும் கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலையில்

# வேளாண் கண்காட்சி - கருத்தரங்கம் - 2025!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**திருவண்ணாமலை, டிச. 29-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.12.2025) திருவண்ணாமலை யில், திருக்கோவிலூர் சாலையில் அரசு மேல்நிலைப்பள்ளி எதிரில் வேளாண்மை - உழவர் நலத்துறை சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள “வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கம் 2025” விழாவில் கண்காட்சி அரங்குகள் மற்றும் கருத்தரங்கத் தினைத் தொடங்கி வைத்தார்.**

தொழில்நுட்பம் நாளுக்கு நாள் வளர்ந்து வரும் சூழ லில், நவீன பயிர் சாகுபடித் தொழில்நுட்பங்களை உழ வர்கள் கடைப்பிடித்து, காலநிலை மாற்றத்தின் தாக்கத் தினை எதிர்கொண்டு குறைந்த பரப்பில் அதிக உற்பத்தி செய்யவேண்டிய நிலையில் அதற்கான அனைத்து செயல்பாடுகளையும் மேற்கொள்ளும் வகையிலும், இயந்திரங்கள் பயன்பாடு, விளைபொருட்களை மதிப் புக்கூட்டுதல், ஏற்றுமதி செய்தல் போன்றவற்றிற்கான விவரங்களை விவசாயிகளுக்கும் தொழில் முனை வோருக்கும் ஒரே இடத்தில் வழங்கிடுவதில் வேளாண் கண்காட்சிகள் மற்றும் கருத்தரங்குகள் முக்கியப் பங்காற்றுகின்றன.

**2025ஆம் ஆண்டு நடைபெற்ற வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்குகளின் விவரங்கள்**

முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, வேளாண்மை–உழவர் நலத்துறையால் வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்குகள் ஆண்டுதோறும் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன. அவ் வகையில், இந்த ஆண்டின் முதல் “வேளாண் கண் காட்சி மற்றும் கருத்தரங்கம்” 11.06.2025 முதல் 13.06.2025 வரை ஈரோடு மாவட்டம், பெருந்துறை அருகில் விஜயமங்கலத்திலும், இரண்டாவதாக **”வேளாண் வணிகத் திருவிழா”** 27.09.2025 முதல் 28.09.2025 வரை நந்தம்பாக்கம், சென்னை வர்த் தக மையத்திலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்க ளால் தொடங்கி வைக்கப்பட்டு சிறப்பாக நடைபெற்றன. உழவர் பெருமக்கள், பொதுமக்கள், மாணவர்கள் ஆகியோர் திரளாகப் பங்கேற்றுப் பயன்பெற்றனர்.

**திருவண்ணாமலையில் நடைபெறும் வேளாண் கண் காட்சி மற்றும் கருத்தரங்கம்**

இதனைத் தொடர்ந்து இந்த ஆண்டின் மூன்றாவது நிகழ்வாக வேளாண்மையில் நவீன தொழில்நுட்பங் கள், வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள், உயர் விளைச்சல் தரவல்ல புதிய பயிர் இரகங்கள், பாரம்ப ரிய இரகங்கள், அறுவடை பின்சார் மேலாண்மை நுட்பங்கள், மதிப்புக்கூட்டும் நுட்பங்கள், சந்தைப்படுத் தும் நுட்பங்கள், உயிர்ம மற்றும் இயற்கை வேளாண்மை, உணவு பதப்படுத்துதல், கால்நடை மற்றும் மீன் வளர்ப்பு நுட்பங்கள், ஏற்றுமதி தொடர் பான விழிப்புணர்வு போன்ற பல்வேறு வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த அனைத்து விவரங் களை யும் உழவர்கள், மாணவர்கள், பொதுமக்களிடையே கொண்டுசேர்த்திடும் வகையில் **27.12.2025 மற்றும் 28.12.2025 ஆகிய இரு நாட்கள் திருவண்ணாமலை திருக்கோவிலூர் சாலையில் அரசு மேல்நிலைப்பள்ளி எதி ரில் “வேளாண் கண்காட்சி மற்றும் கருத்தரங்கு 2025” யை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று தொடங்கி வைத்ததுடன், விழாவில் தலைமை யுரை ஆற்றி, 518 உழவர்களுக்கு 9.43 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.**

முதலமைச்சர் அவர்கள் வேளாண்மை – உழவர் நலத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண் பொறியியல் துறை, கால்நடை பரா மரிப்புத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார் பில் அமைக்கப்பட்டுள்ள வேளாண் கண்காட்சியை திறந்து வைத்து, பார்வையிட்டார். பின்னர், விவசாய பெருமக்கள் பயன்பெறும் வகையில் வேளாண் கருத் தரங்கத்தினையும் தொடங்கி வைத்தார்.

**1000 முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங் கள் தொடங்கி வைத்தல்**

விவசாயிகளுக்குத் தேவையான இடுபொருட்களை யும் சாகுபடிக்கான ஆலோசனைகளையும் துறைத்திட் டங்கள் குறித்த விபரங்களையும் ஒரே இடத்தில் வழங்க ஏதுவாக வேளாண்மை, தோட்டக்கலைப் பட்டதாரிகள், பட்டயதாரிகளால் நடத்தப்படும் **“1000 முதலமைச்சரின் உழவர் நல சேவை மையங்கள்”** திட்டத் தினை யும் முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத் தார்.

**வேளாண் கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள அரங் குகளின் விவரங்கள்**

கண்காட்சியில் அமைக்கப்பட்டுள்ள 250க்கும் மேற்பட்ட உள் மற்றும் வெளிப்புறக் காட்சி அரங்குக ளில், வேளாண்மைத்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை, வேளாண் பொறி யியல் துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மீன்வளத் துறை, ஒன்றிய அரசின் வேளாண் ஆராய்ச்சி நிறுவ னங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் போன்ற அரசுத் துறைகள் தங்கள் செயல்பாடுகள், திட்டங்களைக் காட் சிப்படுத்தியுள்ளனர். நுண்ணீர்ப்பாசன அமைப்புகள் உரம், பூச்சிக்கொல்லி மருந்துகள், வேளாண் இயந்தி ரங்கள் மற்றும் கருவிகள், விதை ஆகியவற்றின் உற் பத்தியாளர்கள், வங்கிகள், பயிர்க்காப்பீட்டு நிறுவனங் கள், சர்க்கரை ஆலைகள் உள்ளிட்ட பல்வேறு தனியார் நிறுவனங்களும் கலந்து கொண்டு வேளாண் உற்பத் திக்குத் தேவையான புதிய இரகங்களின் விதைகள், காய்கறி விதைகள், பழ வகைகளில் ஒட்டு இரகக் கன்றுகள், தென்னையில் வீரிய ஒட்டுக் கன்றுகள், நுண்ணூட்ட உரக்கலவை, உயிர் உரங்கள், இயற்கை உரங்கள் போன்ற இடுபொருட்கள் மற்றும் நவீன உபகரணங்களைக் காட்சிப்படுத்தியுள்ளதுடன் விற்பனையும் செய்து வருகின்றனர்.

உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், பாரம்பரிய உணவு உற்பத்தி நிறுவனங்கள், ஏற்றுமதி நிறுவனங் கள் உணவு பதப்படுத்தும் அமைப்புகளும் பங்கேற் றுள்ளன.

அரசின் அனைத்துத் திட்டங்களையும் ஒரே இடத் தில் தெரிந்து கொள்ள வாய்ப்பாக கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச் சித் திட்டம், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன் னுயிர் காப்போம் திட்டம், மலைவாழ் உழவர் முன் னேற்றத் திட்டம், தமிழ்நாடு சிறுதானிய இயக்கம், உழவரைத் தேடி வேளாண்மை உழவர் நலத்துறை திட்டம், பயறு பெருக்குத் திட்டம், எண்ணெய்வித்து பெருக்குத் திட்டம், ஊட்டச்சத்து வேளாண்மைகாய்கறி சாகுபடி, பசுமைக்குடில் கொய்மலர்கள் சாகுபடி, வணிக ரீதியில் உதிரி மலர்கள் சாகுபடி, காளான் சாகு படி தொழில்நுட்பங்கள், தோட்டக்கலைப் பயிர்களில் தானியங்கி நுண்ணீர்ப்பாசன முறை, பண்டைய காலம் முதல் தற்காலம் வரை தானிய சேமிப்பு முறை கள், புவிசார்குறியீடு பெற்ற பொருட்கள், பல்வேறு இன கால்நடைகள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள், கோழிகள் போன்றவை மாதிரிகள் மற்றும் காட்சிகள், புதிய நவீன சர்க்கரை வளாக மினியேச்சர் மாதிரி, சமீ பத்திய கரும்பு வகைகள் மற்றும் சர்க்கரை ஆலை தயாரிப்புகள் ஆகியவை குறித்த கண்காட்சி அரங்குக ளும், உழவர் செயலி பதிவிறக்கம், அரசு நல உதவித் திட்டங்களில் பயன்பெறப் பதிவு செய்தல், தமிழ் மண் வள இணையதளம் மூலம் மண்வள அட்டை விநியோகம் போன்ற இணையவழி சேவைகளைப் பற்றி அறிந்து கொள்ளவும் அங்கேயே பயன்பெறவும் ஏதுவாக சிறப்பு அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

**வேளாண் கருத்தரங்கங்கள் பற்றிய விவரங்கள்**

வேளாண்மை இயந்திரமயமாக்குதலில் உள்ள சவால்களும், தீர்வுகளும், மண்வளம் காக்கும் உயிர்ம வேளாண்மை, காலநிலை மாற்றங்களைத் தாங்கவல்ல வேளாண்மைத் தொழில்நுட்பங்கள், நவீன வேளாண் தொழில்நுட்பங்கள், உயர்விளைச் சல் கரும்பும் உன்னத பலன்களும், உழவர்களின் வருமானத்தைப் பெருக்கும் வழிமுறைகள், வேளாண் வணிகம் மற்றும் ஏற்றுமதிக்கான வாய்ப்புகள், இடைத்தரகரில்லா வேளாண் சந்தை, மின்னணு சந்தை, நஞ்சில்லா வாழை, கரும்பு, மரவள்ளி, மஞ்சள் உற்பத்திக்கான பூச்சி நோய் மேலாண்மை, அடுத்த தலைமுறைக்கான தோட்டக்கலைப் பண்ணையம், மகத்துவ மஞ்சள் சாகுபடி, வளம் தரும் வாழை சாகு படி, தென்னையில் பூச்சி நோய் மேலாண்மை மற்றும் மதிப்புக்கூட்டுதல், வேளாண் காடுகள் மூலம் வருமா னம், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுக்கு வழி காட்டுதல், மீன்வளர்ப்புத் தொழில்நுட்பம் போன்ற நவீன தலைப்புகளில் விஞ்ஞானிகள், அனுபவமிக்க வேளாண் பெருமக்கள், தொழில்நுட்ப வல்லு நர்களைக்கொண்டு கருத்தரங்குகளும் நடத்தப்படு கின்றன.

மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் இக்கண்காட்சிக்கு உழவர்களை அழைத்து வருவ தற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வேளாண் கண் காட்சி மற்றும் கருத்தரங்கில் வேளாண் பெருமக்கள், பொதுமக்கள், மாணவர்கள் என சுமார் ஒரு இலட்சம் பேர் கலந்து கொண்டு பயன்பெறுவர்.

இவ்விழாவில், பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச் சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் சி.என். அண்ணாதுரை, தரணிவேந் தன், தே.மலையரசன், சட்ட மன்ற உறுப்பினர்கள் மு.பெ. கிரி, பெ.சு.தி. சரவணன், எஸ். அம்பேத்குமார், ஓ. ஜோதி, தா. உதயசூரியன், ஏ.ஜெ. மணிக்கண் ணன், லட்சுமணன், வேளாண்மை உற்பத்தி ஆணை யர் மற்றும் அரசு செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிக ஆணையர் ஆபிரகாம், வேளாண்மை இயக்குநர் பா. முருகேஷ் தோட்டக்கலைத்துறை இயக்குநர் பெ. குமாரவேல் பாண்டியன் சர்க்கரைத்துறை இயக்குநர் த. அன்பழகன் திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ் வேளாண்மை பொறியியல் துறையின் தலைமைப் பொறியாளர் முனைவர்.ஆர். முருகேசன், மாநகராட்சி மேயர் திருமதி நிர்மலா, உள் ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலு வலர்கள், உழவர் பெருமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### திருவாரூர் மாவட்டம் நன்னிமங்கலத்தில் தாய் – தந்தையை இழந்து உறவினர் வீட்டில் வசித்துவரும்

# குழந்தைகள் சுவாதி - ஸ்வேதா - சிவேஷ்வருக்கு முதல்வர் வீடியோகாலில் ஆறுதல்!

## இலவச வீட்டு மனைப்பட்டாவினை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா - ஆட்சியர் மோகனச்சந்திரன் - பூண்டி கலைவாணன் எம்.எல்.ஏ. வழங்கினர்!

திருவாரூர், டிச.29-

திருவாரூர் மாவட்டம், கூத்தா நல்லூர் தாலுக்கா, நன்னிமங்கலம் மெயின்ரோட்டில் தாய், தந்தையை இழந்து சித்தி, சித்தப்பா பாதுகாப்பில் இருந்துவரும் வசித்துவரும் குழந் தைகள் சுவாதி, ஸ்வேதா, சிவேஷ் வர் ஆகியோரிடம் தமிழ்நாடு முதல மைச்சர் அவர்கள் அலைபேசியில் வீடியோ கால் வாயிலாக ஆறுதல் கூறியபிறகு, தமிழ்நாடு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட, இலவச வீட்டு மனைபட்டாவினைகுழந்தைகளின் வீட்டிற்கு நேரடியாகச் சென்று தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற் றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா, திருவாரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் வ. மோகனச்சந்திரன், திருவாரூர் சட் டமன்ற உறுப்பினர் பூண்டி.கே. கலைவாணன் ஆகியோர் வழங்கி னார்கள்.





திருவாரூர் மாவட்டம், கூத்தாநல்லூர் தாலுக்கா, நன்னி மங்கலம் மெயின்ரோட்டில் தாய், தந்தையை இழந்து சித்தி, சித்தப்பா பாதுகாப்பில் இருந்துவரும் வசித்து வரும் குழந்தைகள் சுவாதி, ஸ்வேதா, சிவேஷ்வர் ஆகியோரிடம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அலைபேசியில் வீடியோ கால் வாயி லாக ஆறுதல் கூறியபிறகு, தமிழ் நாடு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட, இலவச வீட்டுமனை பட்டாவினை குழந்தைகளின் வீட்டிற்கு நேரடியாக சென்று தொழில் முதலீட்டு ஊக்கு விப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி. ராஜா, திருவாரூர் மாவட்ட ஆட்சித்த லைவர் வ. மோகனச்சந்திரன், திருவாரூர் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் ஆகி யோர் வழங்கினார்கள்.

தமிழ்நாடு முதலமைச்ச சர் அவர் கள் அலைபேசியில் வீடியோ கால் வாயிலாக குழந்தைகளிடம் தைரிய மாக இருக்க வேண்டுமெனவும், கல் வியில் சிறந்து விளங்க வேண்டுமெ னவும் அறிவுரை வழங்கினார்கள்

மேலும், தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டுவரும் அன்புக்க ரங்கள் திட்டத்தின் மூலம் ஜனவரி மாதம் முதல் மாதந்தோறும் இக்குழந்தைகளுக்கு ரூ.2000 கிடைக்க வழிவகைசெய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், மன்னார்குடி வரு வாய் கோட்டாட்சியர் யோகேஸ்வ ரன், கூத்தாநல்லூர் நகர்மன்றத்த லைவர் திருமதி.பாத்திமா பஷிரா தாஜ், கூத்தாநல்லூர் நகராட்சி ஆணையர் செல்வி.சிவரஞ்சனி, கூத்தாநல்லூர் வட்டாட்சியர் திருமதி. வசுமதி, மன்னார்குடி வட்டார வளர்ச்சி அலுவலர் நமச்சிவாயம் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்திலிருந்து, தனது முதல் பயணத்தை புதிய சொகுசு பேருந்துகள் தொடங்கியது. அதில் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்திலிருந்து திருச்சி செல்லும் பேருந்தில் சென்ற பயணிகளுடன் போக்குவரத்து துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பயணம் செய்தார்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் போச்சம்பள்ளி ஒன்றியத்தில் கட்ட காரம், வேடர் தட்டக்கல், பூசாரி கொட்டாய், அங்கன்வாடி மையம் மேல்நிலை நீர்த்தக்க தொட்டி, அரசம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் வகுப்பறை கட்டிடம் ஆகிய புதிய பணிகளை தொடங்கி வைத்து புளியம்பட்டி ஊராட்சி மயிலம்பட்டியில் புதிய அங்கன்வாடி மையத்தினை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் திறந்து வைத்தார் இந்நிகழ்ச்சியில் மாநில வர்த்தக அணி துணை செயலாளர் அன்பரசன் , பொருளாளர் கதிரவன், ஒன்றிய செயலாளர் சாந்தமூர்த்தி, பேரூராட்சி தலைவர் தம்பிதுரை மற்றும் இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சங்கர் , சரவணன் மாணவரணி ஜெயந்திரன், இளையராஜா, அம்மன் ராஜா, கௌதம், சுரேந்திரன் உள்ளிட்ட ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



சேலம் கிழக்கு மாவட்டம் வீரபாண்டி வடக்கு ஒன்றியத்திற்குட்பட்ட வேம்படிதாளம் ஊராட்சியில் ரூ.24 லட்சம் மதிப்பில் சௌடேஸ்வரி அம்மன் கோவில் தெரு கான்கிரீட் சாலை அமைக்கும் பணியினை கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ். ஆர். சிவலிங்கம் எம்.பி., தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட துணை செயலாளர் க. சுரேஷ்குமார், வடக்கு ஒன்றிய செயலாளர் ராமாபுரம் சதீஷ்குமார் , பொதுக்குழு உறுப்பினர் சந்திரமோகன், சண்முகம் ,ராஜேந்திரன், திருமூர்த்தி, மகாலிங்கம் ,மணிகண்டன், தனசேகரன் ,குமார் ,ஜெகதீஷ், பிரவீன், ஜெயராஜ், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.